

# தமிழ்க் கல்வெட்டுகள்

**தமிழ்க் கல்வெட்டுகள்** எனப்படுபவை தமிழ் மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் ஆகும். கல்வெட்டுக்கள் பல நூற்றாண்டுகளாக நிலைத்து நின்று அவற்றில் குறிக்கப்பெற்ற செய்திகளையும், அவை எழுதப்பட்ட கால மொழி, எழுதியவர்கள், எழுதுவித்தவர்கள் அவர்களின் சமூகம் முதலிய செய்திகளைச் சொல்லுகின்றன. இவை அம் மொழி, சமூகம் பற்றிய வரலாற்றுத் தகவல்களை அறிய முக முக்கியமான ஆவணங்களாக திகழுகின்றன. உலகிலேயே இலத்தீனுக்கு அடுத்து [1] இந்தியத் தொல்லியல் ஆய்வு மையம் (2005 அறிக்கை) கண்டறிந்த சுமார் 100,000 கல்வெட்டுகளில், சுமார் 60,000 தமிழ்நாட்டில் உள்ளன.[2]



பொ.ச.மு. 3 ஆம் நூற்றாண்டய மங்குளம் தமிழ் கல்வெட்டு




தமிழ் நாட்டின், ஜம்பை
கிராமத்தில் கிமு முதல்
நூற்றாண்டய தமிழ் கல்வெட்டு




பொ.ச.மு. முதல் நூற்றாண்டு, புதுக்கோட்டை மாவட்டம், சித்தனவாசலில் உள்ள சமணத் துறவிகளின் தமிழ் எழுத்துக்களைக் கொண்ட கல் படுக்கைகள்

# பண்டைய இந்தியக் கல்வெட்டுக்கள்



கிமு 250 காலத்திய பிராமி எழுத்தில் அசோகர் கல்வெட்டுகளில் ஒன்று, லௌரியா-ஆராராஜ், பிகார்



குப்தர்கள் காலத்திய எழுத்துமுறையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், கான்கேரி குகைகள் மகாராட்டிரம்



பாதமி சாளுக்கியர் காலத்திய, கிபி 875-ஆம் ஆண்டின், பழைய கன்னட மொழி வெற்றித் தூண் கல்வெட்டு, விருபாட்சர் கோயில், பட்டடக்கல், அய்கொளெ, கர்நாடகா

வட இந்தியாவில், கிமு மூன்றாம் நூற்றாண்டில் பிராமி எழுத்தில் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட அசோகரின் கல்வெட்டுகளும், தமிழ்நாட்டில் தமிழி எழுத்தில், தமிழ் மொழியில் எழுதப்பட்ட மாங்குளம் கல்வெட்டுகள் முதலில் அறியப்பட்டதாகும்.

தென்னிந்தியாவில் சமணர்களின் தமிழ் பிராமி, பட்டிபிரோலு எழுத்து முறையிலும் கடம்ப எழுத்துமுறையிலும் பொறித்த கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும் பழனி[3][4] கொடுமணல்[5] மற்றும் ஆதிச்சநல்லூரில்[6] கிமு 500 ஆண்டுகளுக்கு முந்தைய பண்டைய தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளது.

அசோகர் காலத்திற்கு முந்தைய கல்வெட்டுகள் இலங்கையின் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.[7]

கிபி நான்காம் நூற்றாண்டு காலத்திய சமசுகிருத மொழி கல்வெட்டுக் குறிப்புகள் முதன்முதலில் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.[8]

கிபி முதல் ஆயிரமாண்டிற்குப் பின்னர் பாறை, தூண், சமணர் படுகைகள் மற்றும் குடைவரை சுவர்களில் கல்வெட்டுகள் மற்றும் செப்புப் பட்டயங்கள் அதிகம் கண்டறியப்பட்டது.[9]

இந்தியத் தொல்லியல் ஆய்வகம் கண்டெடுத்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகளில், 60,000 கல்வெட்டுக்கள் தமிழ் மொழி கல்வெட்டுகளாகும்.[10] ஒரு இலட்சம் கல்வெட்டுகளில், 5% கல்வெட்டுக்கள் மட்டுமே தெலுங்கு, கன்னடம், சமசுகிருதம், மராத்தி மொழி கல்வெட்டுகளாகும். [11] .